மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எடை குறையக்கூடாது என்றும், விலை கூடக்கூடாது என்றும்தான் சொல்லலாமே தவிர தரத்தைக் கட்டுப்படுத்துவது இயலாது. தரமான ஓட்டல்களைச் சாப்பிடுகின்றவர்கள் தான் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். மேலும் எடை குறையக்கூடாது என்றும், விலை ஏறக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கின்ற நிலையில்தான் நாம் இருக்கிறோம். சட்டப்படி நடவடிக்கை எடுக்க இயலாது. ஆகவே சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்குரிய வழியைத்தான் இப்போது ஆராய்ந்துகொண்டிருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இரண்டு இட்லிக்கு 35 பைசா என்று நிர்ணயம் செய்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் இருக்கின்ற உணவு விடுதியில் ஒரு இட்லிக்கு 20 காசு வசூல் செய்கிறார்கள். ஒரு காப்பி 50 பைசா என்றும் ஏதோ விஜிடேரியன் ஸ்பெஷல் சாப்பாடு என்பதற்கு—நான் இப்போது விஜிடேரியன் சாப்பாடுதான் சாப்பிடுகிறேன்—4 ரூபாய் என்றும் வசூல் செய்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒருநாள் திடீரென்று அங்கே வந்து சாப்பிட்டு அந்த உணவின் தரத்தைப் பற்றி அறிந்து கொள்கின்ற அளவில் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்த விடுதிகளின் நிலைமை எப்படி எப்படி இருக்கின்றது என்ற விவரம் தெரியாது. பொதுவாகவே சுயக் கட்டுப்பாடு என்று இருந்ததில் அவர்கள் சரியாக ஓட்டல்களை நடத்தாத காரணத்தால்தான் சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவிலே ஏதாவது முயற்சிகள் செய்யலாமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கின்றபோது ஸ்பெஷல் சாப்பாடு என்றுதான் சொன்னார்கள். ஆகவே ஸ்பெஷல் சாப்பாடு என்பதிலே என்னென்ன வகைகள் இருக்கின்றன என்பது நமக்குத் தெரியாது. ஸ்பெஷல் சாப்பாடு என்பதற்கேற்றபடி கட்டணம் வசூலித்திருப்பார்கள். ஆகவே அதைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாமா என்ற முறையில் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறோம்.

அரசு குடியிருப்புகளுக்கு வாடகை

*வினா எண். 262—திரு. ஜே. எஸ். இராசு, திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசாங்கக் குடியிருப்புகளுக்கு வாடகை நிர்ணயிப்பது குறித்து ஒரு குழுவை அரசாங்கம் நியமித்ததா ?

(ஆ) ஆம் எனில் அதன் பரிந்துரைகள் என்ன ?

1981 பிப்ரவரி 10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்

(ஆ) இக்குழுவின் பரிந்துரைகள்* பேரவையின் முன்வைக்கப் படுகின்றன.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, அரசாங்கமே முன் வந்து அமைத்த பூர்ணலிங்கம் கமிட்டி தனது அறிக்கையை இரண்டாண்டுகளுக்கு முன்னே அரசுக்கு அளித்திருந்தும் இப் போதுதான் அந்த அறிக்கை அவையிலே வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் அந்தக் குழுவின் பரிந்துரைகளை அரசு உடனடியாகச் செயல்படுத்து வதற்கு ஆணையிடுமா என்பது பற்றி அமைச்சரவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவ ரவர்களே, ஏற்கனவே ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் விண்ணப்பத்தின் பேரில் தற்காலிகமாக அந்த ஆணை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக ஊழியர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அதி காரிகள் சங்கம், அடிப்படைப் பணியாளர்கள் ஒன்றியம், அரசுத் துறை வண்டி ஒட்டுநர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அரசாங்க அதிகாரிகளோடும், தலைமைச் செயலாளரோடும் கலந்து பேசினார்கள். அந்த வீடுகளின் வாடகை ஸ்டான்டர்டு வாடகைக்குச் சமமாக இருக்க வேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கின்றது. ஆகவே அந்தக் குழு சொன்ன கருத்துக்களையும், சங்கங்கள் சொன்ன கருத்துக்களையும் அரசு ஆராய்ந்து வருகிறது. இந்த அரசு அதுபற்றிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, அரசாங்கக் குடியிருப்புகளில் சட்டப்பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அங்கே எந்த அடிப்படையில் குடியிருப்பை ஒதுக்கி இருக்கிறார் கள் என்பதை அறிய விரும்புகிறேன். அவர்கள் தற்போது வாடகை கொடுத்து வருகிறார்கள். ஆகவே ஹையர் பர்சேஸ் என்ற முறையில் அந்தக் குடியிருப்புக்களை அவர்களுக்கே சொந்த மாக்குகின்ற வகையில் ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

*[267-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

[1981 பிப்ரவரி 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வீட்டு வசதி வாரியம் அரசு பொதுப் பணித் துறை ஆகியவை பின் பற்றுகிற சில பல ஏற்பாடுகள் பற்றி அரசுப் பணியாளர்கள் கேட்டிருக்கிற கோரிக்கைகளையும் வைத்து ஆராய்ந்து அறிக்கை கொடுப்பதற்காகத்தான் இந்தக் குழு நியமிக்கப்பெற்றதே தவிர மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கும் வீட்டு வசதி வாடகைகளைப் பற்றி அல்ல. அதில் வீட்டு வசதி வாரியமும், தமிழ்நாடு பொதுப்பணித் துறையும் விதித்திருக்கும் வாடகை விகிதம் அவர்களால் கொடுக்க முடியாத ஒன்று—மிக அதிகமான வாடகையை அவர்கள் நிர்ணயம் செய்கிறார்கள் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. பொதுப்பணித் துறையின் தலைமைப் பொறியாளர் திரு. கந்தசாமி அவர்கள் தலைமையில்தான் இந்தக் குழுவிற்கு ஆலோசனைகள் கூறப்பெற்றன. அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பற்றித்தான் இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம். வீட்டுவசதி வாரியமும் பொதுப்பணித்துறையும் நிர்ணயிக்கும் வாடகை விகிதத்தில் அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்க கூடாது, அவர்களைத் தனியாகக் கவனிக்க வேண்டும் என்று திருப்பித் திருப்பி பரிந்துரைகளை அந்தக் குழுவினர் செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அரசுப் பணியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் தங்களது கஷ்டங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து விரைவில் அரசு ஒரு முடிவிற்கு வரும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ அரசுத் தரப்பில் காலம் கடத்தினாலும், இந்தக் குழுவினுடைய அறிக்கையையாவது அரசு அப்படியே ஏற்றுக் கொள்கிறதா? ஏற்றுக் கொண்டு உடனடியாக அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆணை இடுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியே ஏற்றுக் கொள்ளும் என்று சொல்வதற்கு இல்லை. குழு அறிக்கையைக் கொடுத்து இருக்கிறது. சங்கங்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து அரசு முடிவிற்கு வரும். அந்த முடிவு அறிவிக்கப்பெறும்.

[1981 பிப்ரவரி 10]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களுக்கு அரசு வீட்டு வாடகைப்படி கொடுத்து வருகிறது. தமிழ்நாட்டில் வெவ்வேறு குடியிருப்புகளில் வசிக்கும் அரசுப் பணியாளர்களுக்கு, அரசு கொடுத்து வரும் வீட்டு வாடகைப் படிக்கு அதிகமாகப் போகாமல் அதே அளவில் வீட்டு வாடகை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குடியிருப்புகளில் இருக்கும் அதே அளவுக்கு வீட்டு வாடகைப்படி என்ற அளவிற்குத் தந்தால் அந்த வாடகைகள் இடத்திற்கு இடம், வசதிகள் பொறுத்து மாறுபட்டிருக்குமே, எல்லோருக்கும் ஒரே விதமான வீட்டு வாடகைப்படியைத் தர முடியாத நிலை ஏற்படுமே என்றுதான் அரசு அந்த முறையைக் கையாளுவதில்லை. அதற்கு ஒரு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தான் இந்தக் குழு அமைக்கப் பெற்றது. அந்தக் குழு, பொதுப்பணித்துறை விதிக்கும் வீட்டு வாடகை நிர்ணயமும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வீட்டு வாடகை நிர்ணயமும் அதிகமாக இருப்பதினால், அதை அரசுப் பணியாளர்களுக்குக் கட்டுப்படியாகும் அளவில் பாதியாகக் குறைத்துக்கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். வேறு பல நிலைமைகளையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அரசு ஆராய்ந்து வருகிறது. ஆராய்ந்து நல்ல ஒரு முடிவினை ஏற்படுத்துவதற்கு அரசு முயலும்.

பழனியில் பல்கலைக்கழகம்

*வினா எண். 263—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி— அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானத்தின் மூலம் பழனியில் பல்கலைக் கழகம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

TRUTH ALONE TRIUMPHS